இந்திய சமூக ஜனநாயகக் கட்சியின் (SDPI) விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் விருகை பகுதி தலைவர் டி.எஸ்.கதீர், எஸ். முகமது இப்ராஹிம் 128வது வட்ட செயலாளர் ஹிதாயத்துல்லாஹ், 128 வது வட்ட இணைச்செயலாளர் சமீர், 128 வது வட்ட பொருளாளர் ஷிஃப், 129 வது வட்டத் தலைவர் சையது, சாதிக் பாஷா நகர் கிளை கழக நிர்வாகி சமீர்பாஷா மற்றும் மாற்று இயக்கத்தை சார்ந்த 100 நபர்கள் மேற்பட்டோர் சென்னை தெற்கு மாவட்ட கழக பிரதிநிதி டி.எஸ்.பி.தென்னரசு ஏற்பாட்டில் கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.நகர் க.தனசேகரன் ஆகியோர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள். இதில் பகுதி கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மு.இராசா, கே.கண்ணன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரத்னா லோகேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன், 128 அ வட்ட கழக செயலாளர் வீ.ஏ.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு – பயனாளிகளுக்கு உரிய ஆவணங்களை வழங்கினார்!

சென்னை, ஆக.29-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு-75 சென்னை, கீழ்பாக்கம் செகரட்டிரியேட் காலனியில் நேற்று (28.8.2025) வியாழக்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்.23 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 163 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

ஆதார் இணைய சேவைகள் மனு 73 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 23 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 47 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 25 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 246 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -5 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்.

கலைஞர் மகளிர் உரிமை தொகை -956 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்.

இதர மனுக்கள் -86 என மொத்தமாக 2073 மனுக்கள் பெறப்பட்டு அதில் 5) 2066 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர் ரமணி லோகேஷ், செயல் பொறியாளர் சரவணன், வட்ட கழக செயலாளர்கள் வி.க.வெங்கடேசன், பா.பி.தாஸ், மற்றும் 75,75 அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குணம் கிராமமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மணமக்கள் எம்.ரமேஷ் – டி.வர்ஷிதா ஆகியோரின் திருமணத்தை சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு வேளச்சேரி மேற்கு பகுதி துணை அமைப்பாளர் சேவா ரத்னா எஸ்.நஜிம் நடத்தி வைத்து நிதி உதவி வழங்கினார். உடன் வழக்குரைஞர் சி.ம.வெற்றிவேல், வெங்கடேசன், சுதாகர்,ஏழுமலை, மகாதேவன், கார்த்திக், பச்சையப்பன்,ராஜா, முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் வடக்கு பகுதி ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி துணை அமைப்பாளர் கலியமூர்த்தி இல்ல புதுமனை புகுவிழா நேற்று (28.8.2025) நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் ப.குணாளன், மண்டல குழு தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், அவைத் தலைவர் டில்லிபாபு, மாமன்ற உறுப்பினர் பாரதி, வட்ட செயலாளர் எம்.ஜி. கருணா, குமரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆண்டார்குப்பம் கோவிலில் இந்து அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற இலவச திருமண நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து சீர் வரிசை பொருட்கள் வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, பொதுக்குழு உறுப்பினர் பா.சே.குணசேகரன், மீஞ்சூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஆ.ராஜா உள்பட பலர் உள்ளனர்

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி!

சென்னை, ஆக. 29 -

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 9.9.2025 முதல் 11.9.2025 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் கோதுமை வெண்ணெய் பிஸ்கட், தினை பால் பிஸ்கட், தினை ஜீரா குக்கீ, செரிமான குக்கீகள், ராகி நட்ஸ் குக்கீகள், மல்டிமில்லட் குக்கீகள், சோளம் சாக்லேட் பிஸ்கட், கம்பு நெய் பிஸ்கட், கருப்பு கவுனி பாதாம் குக்கீ, தினை ஓமம் பிரவுன் குக்கீ, பிரவுன் ஓமம் பிரவுன் குக்கீ, ராகி, சாமாமில் பிரவுன் குக்கீ ஃபட்ஜி பிரவுனி, கருப்பு கவுனி பிரவுனி, டபுள் சாக்லேட் பிரவுனி, கோதுமை வெண்ணிலா பஞ்சு, ராகி சாக்லேட் கேக், தினை வாழை கேக், சோளம் கேரட் இலவங்கப்பட்டை கேக், முழு கோதுமை ரொட்டி, ராகி தினை ரொட்டி, மல்டிமில்லட் ரொட்டி, பால் ரொட்டி வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள். மேலும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்சகல்வித்தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் WWW.EDITN.IN என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8668102600 / 7010143022. முன்பதிவு அவசியம்: அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில்

இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் பெற பெண்கள் விண்ணப்பித்திடுவீர்!

தமிழ்நாடு அரசு சமூக நலத் துறை அறிவிப்பு!

சென்னை, ஆக. 29 -

பெண்களின் பாதுகாப்பு மற்றும் மகளிர்க்கு அதிகாரம் அளித்தலுக்கான பல முன்னெடுப்பு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்திவருகிறது. தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஒரு புதிய முயற்சியாக, சென்னை மாநகரில் 250 பெண் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு தொழில்வாய்ப்பு ஏற்படுத்துவதுடன் பெண்களின் பாதுகாப்பான பயணத்தையும் உறுதிசெய்திடும் பொருட்டு "இளஞ்சிவப்பு ஆட்டோக்கள்" வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும். ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS பொருத்தப்பட்டிருக்கும். இது அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும். இளஞ்சிவப்பு ஆட்டோ பெறும் பயனாளி களுக்கு கட்டணங்கள் ஏதுமின்றி (COMMISSION) "ஊர் கேப்ஸ்"செயலி பயன்படுத்த வழிவகை செய்து தரப்படும்.

சென்னை மாநகரில் 250 இளஞ்சிவப்பு CNG ஆட்டோக்கள் இயக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு முதல்கட்டமாக தகுதியான பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சர்வதேச மகளிர் தினமான 08.03.2025 அன்று இளஞ்சிவப்பு ஆட்டோக்களை மகளிருக்கு வழங்கி இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதனை தொடர்ந்து CNG ஆட்டோக்கள் மூன்றாம் கட்டமாக வழங்கப்பட வுள்ளதால் தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறும்பொருட்டு இத்திட்டத்தின் கீழ் பயன் பெற 15.09.2025 தேதி வரை விண்ணப்பங்கள் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் வரவேற்கப்படுகின்றன.

i. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iii. 20 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

iv. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

v. சென்னையில் குடியிருக்க வேண்டும்.

எனவே, சென்னையில் உள்ள ஆட்டோ ஓட்ட விருப்பமுடைய பெண் ஓட்டுனர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை 600 001. சிங்காரவேலர் மாளிகை, 8-ஆவது தளத்தில் செயல்படும் சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் (வடக்கு) அல்லது சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் (தெற்கு) என்ற முகவரியிட்டு 15-09-2025 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சமூக நலத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராயபுரம் கிழக்குப் பகுதி

50வது வட்டம் - பி.செந்தில் (எ) பிரணவ் விஜய் மறைவு!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, – ஜட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ, – தா.இளையஅருணா அஞ்சலி!

சென்னை, ஆக. 29-

இராயபுரம் கிழக்கு பகுதி 50 வது வட்டம் சார்ந்த பி.செந்தில் (எ)பிரணவ் விஜய் 26/8/2025 அன்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்து வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம் ஆர்.மூர்த்தி, சென்னை பெருநகர நகர நகரமைப்பு குழு தலைவர் தா.இளைய அருணா, மாநில பொறியாளர் அணி இணை செயலாளர் பி.டி.பாண்டி செல்வம், சென்னை வடக்கு மாவட்ட துணை செயலாளர் மு.கோபி , பொதுக் குழு உறுப்பினர் நா.சண்முகம், இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், திருவொற்றியூர் பகுதி செயலாளர் தனியரசு, சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன், சென்னை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டுவன், பொறியாளர் அணி அமைப்பாளர் லியோ டி.சுரேஷ், மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி வேலு,

ஜே.கே.நாதன், கட்பீஸ் ப.சோமசுந்தரம், மூர்த்தி, கா.கோவிந்தசாமி, ஆர்.பி. கணேஷ், பி.கண்ணன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கோ.வேலுமணி, பிரேம்நாத், பாலாஜி, ஜாகிர் அப்பாஸ், எஸ்.குமரன், ராஜசேகர், சுஜாவுதீன், டி.மதன் டில்லி, ஜெகதீஷ், பிரேம், சிவா, பி.டி.பி.கதிரவன், ரா.இம்ரான், கோ. ஹரிஷ் குமார், அயாத் பாஷா, ஜி.தனசேகர், பா. லியாகத் பாஷா, வி.பிரேம், ஆர்.பி.சேகர், வளன் ரமேஷ், விமல் பாபா பாஸ்கர் ஜெயசீலன், பி.ஆன்சர் ஸ்ரீதர், கழகத் தோழர்கள், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–151, பூத்தப்பேடு சென்னை நடுநிலைப் பள்ளியில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் ரூ.1 கோடியே 22 இலட்சம் மதிப்பீட்டில் புதிய 4 வகுப்பறைகள் கட்டும் பணிக்கு நேற்று 28.08.2025 மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன்,எம்.சி., தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ்,எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.சேகர், பகுதி அமைப்பாளர் பூத்தப்பேடு பி.ரகு, ஏ.செந்தில்குமார், வட்ட கழக நிர்வாகிகள் செ.ராமையா, என்.துரை, கே.குமார், எம்.சுந்தர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.